INTACH MADURAI
Indian National Trust for Art and Cultural Heritage

இந்தியக் கலை மற்றும் பண்பாடு மரபுரிமை
தேசிய அறக்கட்டளை - மதுரை பிரிவு

# மதிரய்

**புரட்டாசி** 2025
**வெளியீடு மலர்** 2 **இதழ்** 1



## களிறு ஓட்டல்


மதுரைக்காஞ்சி நூல் அவுணரை வென்ற முல்லைநிலத் தெய்வமான மாயோனுக்கு உகந்த ஓண நன்னாளில் வீரவிளையாட்டு நிகழ்த்தியதை உரைக்கிறது. பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் மதுரை சேரிப்பகுதியினில் மறவர், களிறு ஓட்டல் விளையாடினர்.


மறவரும் களிற்று யானையும் போர் முனையில் துணிவுடன் எதிர்த்து நிற்றலிலும், காயம் தாங்கி தன்மை மாறாதிருத்தலிலும் நிகராய் விளங்கினர்.
என்றும் போர் செய்ய வேண்டும் என்றெண்ணும் மறவர், அடி மாறாமல் நின்றதனால் ஏற்பட்ட நெற்றி வடுவுடைய விடையாட்டு வீராங்கனை ஆவார். யானைப்பாகன் தோட்டியினால் போருக்காக பழக்க வெட்டின வடு முகத்துடன், போரைத் தாங்கும் பெரிய கையினையுடைய கடுங்களிறும் வீராங்கனையாகும். களிற்று யானைகளை ஒன்றோடு ஒன்று மோத வீரமறவர்கள் ஓட்டினர். குதிரையோட்டியரும் இடையிடையே வேகவோட்டத்தினை ஊக்குவித்தனர்.

யானை ஓட்டலைக்  காணவரும் மக்கள் நிற்பதற்காக உயர்ந்த மேட்டுக்கரை கட்டப்பட்டது. கரையில் பரற்கற்கள் உறுத்த கட்டிக்கரை கழாகத்துணியை நிலத்தில் விரித்தனர். உரையாசிரியர் கூற்றுபடி கடிய கள்ளையுண்டு மகிழ்ச்சி மிகுந்த பரிக்காரர்கள், யானையின் விசையைக் காண மோதவிருக்கும் யானைகளுக்கு முன்னேயோடுகின்றனர். நெடிய கரையில் துணி மேலிருந்து இதனைக் காணுபவர்கள், யானை தம்மேல் வராமல் தடுக்க, தற்காப்பிற்காக மடிகளிலில் கப்பணம், யானை போர்க்கருவி இரும்பு நெருஞ்சி முள் வைத்திருந்தனர்.



மதுரை நாயக்கர் காலத்திலும் களிறு ஓட்டல் நடைபெற்றது. இராணி மங்கம்மாள் தமுக்கம் களத்தில் அரச விழாவாக நிகழ்த்தினார்




இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்திய க்கலை மற்றும் பண்பாடு மரபுரிமை தேசிய அறக்கட்டளையின் தொடர்புடைய நுண்கலைத்துறை தலைமைப் பேராசிரியர் அகிலன் மரபுரிமைப் பறைதல் எனும் நூலினை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

அவர்தம் ஏற்பாட்டில் மரபு மீட்பு என்கிற தலைப்பில் மாணவர்களின் பங்கினை எடுத்துக்கூற இயன்றது. ஆங்கிலத்தில் ஹெரிட்டேஜ் என்பதன் தமிழாக்கம் இந்தியாவில் மரபு என வழக்கத்தில் இருந்தாலும் மரபுரிமை என்பதே மிகச்சரியாக இருக்கும், உரிமை விடாது சொல்ல வேண்டும் என விளக்கம் அளித்தார்.

உடன் வந்திருந்த சென்னை உறுப்பினர் துருவா அவர்களும், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டெபோரா ஆல்டமன் அவர்களும் மாணவர்களுடனான கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இலங்கை-இந்திய நாடுகளிடையே கலை மற்றும் பண்பாட்டுறவும் தொடர்ச்சியும் அடையாளங் காண்பதில் ஆர்வம் கூடியது. பொது மரபுரிமையிலும் தனித்துவம் தென்படுங்து சிறப்பு







கால் நூற்றாண்டு முற்காலத்தில் எழுந்த உரிமைக்குரல் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள பொங்கு தமிழ்ப் பிரகடனம் - தற்பொழுது தமிழர் மரபுரிமைச் சின்னமாக மீண்டும் எழுப்பப்பட்டது.


## அரவு நுங்கு மதி

இந்நூற்றாண்டில் நீண்டு வீற்றிருந்தது செந்நிலவு. ஆவணி 22 , 2025 நள்ளிரவு உச்சந்தலைமேல் நோக்க தொலைவில் ஒளிர்ந்தது செஞ்சுறு செஞ்சுடர். மங்கலத் தோற்றம் பொங்கி எழுந்தது. கோடிக்கண் கண்ட அரியக்காட்சியில்தான் எத்தனைக் கோடி இன்பம்!




ஆண்டுதோறும் கண்டுணர்ந்ததில், காலங்காலமாய் பன்னாட்டு பண்பாட்டில் பலவாறு சித்தரிக்கப்பட்டன. பல்வேறு உருவகங்கள் உருவாயின. தமிழர் பண்பாட்டில் பாம்பு மதி விழுங்கி கக்குவது போன்று சந்திர கரவாணம் பின்னர் கிரகணம் அல்லது மதி மறைப்பு எனும் வியத்தகு நிகழ்வை நயம்பட எடுத்துரைத்தனர். நிலவின் அமுதப்பொழிவு ஓராண்டில் இருமுறை தடுக்கப்படுகின்றது.

முழுமதி புவியின் நிழல் படிய சற்றே மறைந்து, பின்னர் பழைய நிலைக்கே திரும்பிவிடும். பாம்பினால் மட்டுமே தான் விழுங்கிய பொருளை இருந்தவாறே வெளியே விட்டுவிட முடியும். அரவு நுங்கு மதி எனச் சங்க இலக்கிய நூல்கள் குறுந்தொகை (395) மற்றும் அகநானூறு (114, 313) இவ்வாறே இதனைக் குறிப்பிடுகின்றன. சிறுகச்சிறுக மறைந்தப்பின் நிலவு அவ்வாறே வெளிவருவது, பாம்பு விழுங்கி கக்கி விடுவதனை ஒத்திருக்க செந்நாகன் கேது புராணக்கதை உருவானது.



## ஓண நன் நாள்




வானமண்டலத்தில் இருக்கும் இருபத்தேழு விண்மீன் தொகுதியில் ஒன்று ஓணம். வடமேற்குத் திசையில் ஓண நட்சத்திரக் கூட்டத்தை பறக்கும் பறவை வடிவில் பார்க்கலாம். ஓணுதல் என்பது பறத்தல் என பொருள்படும் காரணப்பெயரினை ஏற்றுள்ளது ஓண விண்மீன்.

வானத்தில் இறக்கைகளை அசைக்காமல் வட்டமிட்டு கழுகு பறவையினம் பறக்கும். கண்கொள்ளா இக்காட்சியில் கற்பனை மிகைப்பட ஓணக் குறியீடாக கருடன் போற்றப்படுகிறது. கருடன் வட்டமிடுதல் இராஜயோகம் நல்கும் நிமித்தமாக கருதிட பட்சிராஜன் என சிறப்பிக்கப்படுகிறது. எடுத்த செயல் வெற்றிகரமாக நிறைவேறி உயர்ந்த யோகம் கிட்டுவதற்குச் சமமான பலனைத் தரும் என நம்பப்படுகிறது. இந்நம்பிக்கை கிரேக்க - ரோமானிய பழம்பண்பாட்டிலும் காணப்படுகிறது. இதுவே அக்விலா, லத்தீன் மொழியில் கழுகு நட்சத்திரக் கூட்டமாகும்.

பட்சிராஜன் கருநீலவான வண்ணத் திருமாலின் வாகனமாக விளங்கிட, தெய்வத்திற்கு உகந்ததாய் ஓண விண்மீன் திருவோணம் எனப்பட்டது. ஓணப்பிரான் மற்றும் திருவோணத்தான் என்று பக்தி இலக்கியங்களில் திருமால் சிறப்பாக அழைக்கப்படுகிறார். பறவைகளில் பெருமாள் கருடனாய் திகழ்கிறார். அவர் எடுத்த முதல் மானுட உருவம் வாமன அவதாரமாகும். வாமனன் பிறப்பு ஆவணி ஓண நன் நாளாகும்.

அரக்கரை வீழ்த்துவதற்கு அவதரித்த பெருமாள் வராக அவதாரத்தில் இரண்யாக்சனையும், அடுத்து நரசிம்ம அவதாரத்தில் ஓணநாளன்று அவ்வரக்கனின் அண்ணன் இரணியனையும் தகர்த்தார். பின்னர் இரணியன் தவப்புதல்வனான பிரகலாதன் திருமாலின் அருளால் மூவுலகு ஆளுமை பொறுப்பேற்று திறம்பட ஆண்டான். குல வழித்தோன்றலான
பக்தபிரகலாதன் பேரன் மாவலியும் பெருமாள் பக்தன்; மூவுலகு சக்கரவர்த்தியாய் தனது ஆதிக்கம் நிலைநாட்டிட விழைந்தான். மாவலி வலிமைக் கண்டு தேவர்கள் பொறாமை கொண்டனர். தேவர்களின் தாயான அதிதி, பெருமாளை வணங்கி மாவலியிடமிருந்து தேவர்குலத்தை மீட்க வேண்டினாள். எனவே காசிபன்-அதிதியின் மகனாய், குள்ள வாமனன் அவதரித்தார்.

மாவலி யாகம் செய்வதையறிந்து, வாமனன் ஆங்கே தானமாகத் தன் காலால்
மூன்று அடியளந்த நிலத்தை அந்தணர் குழுமத்திற்காக யாசித்தார். மாவலியும் தருவதாகச் சொன்னான். அரக்கர் குருவாகிய சுக்கிராச்சாரியார் தடுத்தும் கேளாது, மாவலி நிலத்தை வாமனனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான். நீர் செலுத்தி வார்த்திட கையிற்பட்டதுமே குள்ள வாமனன் நெடுமாலாய் வளர்ந்தார் எனும் கதைக்குறிப்பு சங்க நூல் முல்லைப்பாட்டில் (3) வெளிப்பட்டுள்ளது.


ஓண நன் நாள்...

வானுயர நிமிர்ந்த திருமால் ஓரடியால் மண்ணுலகையும், இரண்டாம் அடியால் விண்ணுலகையும் அளந்தார். மூன்றாம் அடியை எங்கே அளப்பது என்று மாவலியைக் கேட்டார். தன் தலையை தாழ்த்தி அடியளக்க இடங்கொடுத்து சக்கரவர்த்தி பணிந்தான். தன்னுடைய மக்களை ஒவ்வொரு ஆண்டும் காண்பதற்கு அருள்புரிய வேண்டினார். திருமாலும் இணங்கி அவனது தலைமேல் அடி வைத்து அழுத்தி மாவலியைப் பாதாளவுலகில் ஒடுக்கினார். ஞாலம் மூன்று அடியளந்த முதல்வனை சங்க நூல் கலித்தொகையும் (124:1) பறைசாற்றுகிறது.

மக்களைக் காண வரும் மாவலி சக்கரவர்த்தியை வரவேற்க கேரளத்திலும் தென்தமிழகத்திலும் ஓண விழா சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. 'மாவலி சுற்று' சடங்கு வேறு சில மாவட்டங்களிலும் நிகழ்கிறது. சமய வேறுபாடின்றி அறுவடைத் திருநாளாகவும் கொண்டாடப்படுகின்றது. மக்கள் நாட்டின் செழிப்பும் ஒற்றுமையும் கண்டு, சக்கரவர்த்திக்கு நன்றி தெரிவித்து பத்து நாட்கள் பரிசு அல்லது தானம் வழங்கி மகிழ்வர்.

பண்டைய தமிழர்கள் ஓண விழாவை பிற மாதங்களிலும் நிகழ்த்தினர். ஐப்பசி ஓண விழா மயிலை கபாலீசர் கோயிலில் நடைபெற்றதை திருஞானசம்பந்தர் பதிவு செய்கிறார். 897 பொ. ஆ. திருவக்கரை கல்வெட்டு பிரட்டாதியிலும் ஒண விழா நிகழ்ந்ததைப் பதிவு செய்கிறது.







செப்டம்பர் 5

**ஆசிரியர் தினம்**

பேராசிரியர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் நண்பர்களும் மாணாக்கரும் அவரது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என விரும்பியபோது, அந்நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஆங்கிலேய ஆட்சியின்போது, தான் கால்பதித்த இடங்களில் புதிய அத்தியாயத்தினைப் படைப்பவராக விளங்கிய காந்தியடிகள், அரவிந்தர், இரபீந்திரநாத் தாகூர், விவேகானந்தர், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் குறிப்பிடத் தகுந்தவர் இராதாகிருஷ்ணன் எனலாம். ஆங்கிலக் கல்வியின் நன்மையினைப் பெற்றதோடு அதன் மூலம் எண்ணற்ற நவீன கருத்துகளை வழங்குபவராக இருந்தனர். மூட நம்பிக்கைகள் மற்றும் அடிமைத்தனத்தை முற்றிலும் எதிர்ப்பவராகவும் திகழ்ந்தனர்.

இந்திய சுதந்திரம் மற்றும் இந்தியக்கல்வி இரண்டிலும் தீவிர அக்கறை கொண்டவராக இராதாகிருஷ்ணன் இருந்தார். என்றும் இயற்கையோடு இயைந்த முறையிலான கல்வியை வரவேற்றார். கல்வியாளராய் பல்கலைக்கழகங்களுக்கு மட்டுமன்றி பள்ளிக் கல்வியிலும் சிறப்பான கொள்கைகளை வகுத்தார்: ஆன்மீகப்பயிற்சி அளித்தல், பிராந்திய மொழி பயிற்சி மொழியாகும் வரை ஆங்கில மொழி தொடர்ந்து பயன்படுத்துதல், கல்வி வாய்ப்புகளைத் திறமையின் அடிப்படையிலேயே வழங்குதல்.

தத்துவஞானியாய் இராதாகிருஷ்ணனின் கருத்து:

1. மனிதனின் உடல், மனம், ஆளுமை ஆகியவற்றின் தேவையை நிறைவேற்றுவதுதான் உண்மையான கல்வி. மனநோய், மனப்பதற்றம் முதலான கேடுகள் எல்லாம் தவறான கல்வியின் விளைவு ஆகும்.
2. தன் மனம் போனபோக்கில் செல்லாமல், தான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சுதந்திரமாக தெரிவுச்செய்து செயல்படக் கூடியவனாக ஒவ்வொருவரும் விளங்க வேண்டும்.
3. தனித்த வாழ்க்கையன்றி சமூகமான மனித உறவுகளையும் சமூக நீதியையும் வளர்க்கும் வாழ்வியல் கலையில் தேர்ச்சி பெற வேண்டும்.




பாரதியார் காலங்கடந்த சிந்தனையாளர். பொறி தட்டிடும் கருத்தாளர். பன்மொழி எழுத்தறிவாளர். சக்தி வாய்ந்தப் படைப்பாளர். அவரை சக்திதாசன் ஆவணப்படம் மூலமாக மாறுபட்ட கோணத்தில் அறியலாம். இக்குறும்படம் காண்போரை மெய்யுணர்வுடன் மகாகவியின் சத்தியத்தேடலில் பயணிக்கச் செய்கிறது.




செந்தமிழ் மொழிக்கு புத்துணர்வு ஊட்டிய செம்மலின் கவிதைகள் தேசியப்பாடலாக ஒலித்தன. கனவு நனவாகி விடுதலை இந்தியாவில் ராகம் தாளம் பொருந்த வானொலியில் இசைத்தமிழறிஞர் பட்டம்மாள் பாரதியர் பாடல்கனைப் பாடி தேசிய குயில் எனும் பெயர் பெற்றார். ஓர் நூற்றாண்டு கடந்து சந்ததியினர் தேடிய ஆய்வு ஆதரவுடன், சில பாரதியாரது வாழ்க்கை நிகழ்வுகளை அவ்விடத்திலேயே ஆவணப்படம் எடுத்துரைக்கிறது.

மேலும் வலியுறுத்தும் சிறந்த கருத்துகள்: மாயையை விடுத்து, நம் வாழ்விற்கு நாமே பொறுப்பு ஏற்கும் எண்ணம் வர வேண்டும். வாழ்வின் துன்பக் காலகட்டத்திலும் இன்பத்தைப் பார்க்க வேண்டும்

salve - श्रव - parler - पढ़ना - write

**உலக எழுத்தறிவு தினம்**
செப்டம்பர் 8, 2025

எழுத்தறிவு என்பது சமூக தொடர்பு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான நுழைவாயிலாகும். சமூகத்தில் அர்த்தமுள்ள வகையில் ஈடுபடவும், சவால்களை சமாளிக்கவும், அமைதியான உலகத்திற்கு பங்களிக்கவும் உதவுகிறது.

"பன்மொழிக் கல்வியை ஊக்குவித்தல்: பரஸ்பர புரிதல் மற்றும் அமைதிக்கான எழுத்தறிவு"
- 2025 ஆண்டின் கருப்பொருள் மூலம் பன்மொழிக் கல்வியில் கவனம் செலுத்தி, பன்முகத்தன்மையின் மதிப்பையும் கற்றலில் உள்ளூர் மொழிகளின் பங்கையும் அறிதல்.

👍🏽 - lernen - கல்வி - entender - 🙏🏽

"மதிரை" (பண்பாட்டு மண்டல தலைநகரத்தின் தொல்லியல் வரலாற்றுச் சுவடுகள்- புதிய தகவல்களுடன்)

இந்நூலில் மதுரையில் இருக்கும் தொன்மையான பெருங்கற்கால சின்னங்கள், கற்படுக்கைகள், பாறை ஓவியங்கள், நடு கற்கள், சுமைதாங்கி கற்கள், புதிய கல்வெட்டுகள், மடை தூண்கள், கல் செக்கு, தாய் தெய்வக் கோயில்கள், சிதைந்த கோயில்கள், கொடிமரம், விளக்குத்தூண், மரபு விளையாட்டுகள் என்பவன பற்றிய தகவல்கள் புகைப்படங்களுடன் உள்ளன.

நூல் விலை ₹200 தொடர்பு எண்- 9865377764

இந்நூல் செப்டம்பர் 5/9/25 முதல் 15/9/25 வரை நடைபெற்ற மதுரை புத்தகத் திருவிழாவில் அறிமுகம் செய்யப்பட்டது.